


**11.12. 2024**

**தலைப்புச் செய்திகள்**

1. ஸ்மார்ட் இண்டியா ஹேக்கத்தான் நிகழ்வு இளைஞர்களிடையே ஊக்கத்தையும், எழுச்சியையும் ஏற்படுத்தியுள்ளதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி மகிழ்ச்சி தெரிவித்திருக்கிறார்.

2. நாட்டில் ரயில் நிலைய மேம்பாட்டு திட்டங்கள் முனைப்புடன் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக மத்திய ரயில்வே அமைச்சர் திரு.அஷ்விணி வைஷ்ணவ் மக்களவையில் தெரிவித்துள்ளார்.

3. எதிர்கட்சி மற்றும் ஆளும் கட்சிகள் இடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டதை அடுத்து மாநிலங்களவை நாள் முழுமைக்கும் இன்று ஒத்திவைக்கப்பட்டது.

4. மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் 143ஆவது பிறந்த தினத்தை ஒட்டி அவரது புத்தக தொகுப்பு புதுதில்லியில் வெளியிடப்படுகிறது.

5. கடலூர், புதுக்கோட்டை டெல்டா மாவட்டங்களில் கன மிக கனமழை இன்று பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**இனி விரிவான செய்திகள்**

************

**பிரதமர் - ஹேக்கத்தான்**

ஸ்மார்ட் இண்டியா ஹேக்கத்தான் படைப்பாற்றல் திறன் போட்டியாளர்களுடனான கலந்துரையாடலை தாம் ஆவலுடன் எதிர்நோக்கி இருப்பதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்திருக்கிறார்.

நாடுமுழுவதும் இன்று தொடங்கியுள்ள ஸ்மார்ட் இண்டியா ஹேக்கத்தான் இறுதி போட்டிகளின் ஒருபகுதியாக பிரதமர்

இன்றுமாலை நான்கரை மணிக்கு இளைய படைப்பாளர்களுடன் கலந்துரையாடுகிறார்.

ஸ்மார்ட் இண்டியா ஹேக்கத்தான் இளைஞர்களிடையே உந்து சக்தியையும், ஊக்கத்தையும், எழுச்சியையும் ஏற்படுத்தும் தளமாக உருவெடுத்துள்ளது என்று பிரதமர் மகிழ்ச்சி வெளியிட்டுள்ளார்.

முன்னதாக மத்திய கல்வி அமைச்சர் திரு.தர்மேந்திர பிரதான் 7 ஆவது ஸ்மார்ட் இண்டியா ஹேக்கத்தான் இறுதி சுற்று போட்டிகளை இன்று காணொலி வாயிலாக தொடங்கிவைத்தார்.

தமிழ்நாட்டில் சென்னை செங்கல்பட்டு நாமக்கல் கோவை மாவட்டங்களை சேர்ந்த தொழில்நுட்ப கல்லூரி மாணாக்கர் இதில் பங்கேற்றுள்ளனர்.

கோவை ஸ்ரீகிருஷ்ணா கல்லூரியை சேர்ந்த 126 மாணாக்கர் 21 குழுக்களாக இந்நிகழ்வில் பங்கேற்றுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**வாய்ஸ்**

அதேபோல் நாமக்கல் Excel தொழில்நுட்ப கல்லூரியை சேர்ந்த 120 மாணாக்கர் 20 குழுக்களாக இதில் பங்கேற்று மத்திய கலாச்சாரம் ஊரக மேம்பாடு மற்றும் பஞ்சாயத்து ராஜ் அமைப்புகளுக்கான மென்பொருள் வடிவமைப்புகளை உருவாக்கும் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

செங்கல்பட்டு சாய்ராம் கல்லூரியிலிருந்து 126 மாணாக்கரும் தூய வளனார் தொழில்நுட்ப கல்லூரியை சேர்ந்த 132 மாணாக்கரும் ஹேக்கத்தான் இறுதி சுற்றில் ஸ்வச்சதா மற்றும் வாழ்வியல் முறை நிதிசேவைகள், பார்சல் விநியோக பிரிவுகள் தொடர்பான மென்பொருள் உருவாக்கத்தை மேற்கொண்டுள்ளனர்.

நாடுமுழுவதும் 51 கல்வி மையங்களை சேர்ந்த ஆயிரத்து 300 மாணாக்கர் இதில் களமிறங்கியுள்ளனர்.

இந்நிகழ்வில் பங்கேற்றுள்ள காஞ்சிபுரம் கல்லூரி மாணாக்கர் எமது செய்தியாளரிடம் பேசுகையில்

**வாய்ஸ்**

************

## குடியரசு தலைவர்

குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு 2024ஆம் ஆண்டிற்கான தேசிய பஞ்சாயத்து விருதுகளை புதுதில்லி விஞ்ஞான் பவனில் இன்று வழங்குகிறார்.

பல்வேறு பிரிவுகளின் கீழ் 45 விருதுகள் இன்று வழங்கப்படுகின்றன.

இவ்விழாவின் போது விருதுபெற்ற ஊராட்சிகளின் நடைமுறைகள் குறித்த கையேட்டை மத்திய பஞ்சாயத்து ராஜ் அமைச்சர் திரு.ராஜீவ் ரஞ்சன் சிங் இன்று வெளியிடுகிறார்.

************

## அஷ்விணி வைஷ்ணவ்

நாட்டில் மிக பிரம்மாண்ட ரயில் நிலைய மேம்பாட்டு திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக மத்திய ரயில்வே அமைச்சர் திரு.அஷ்விணி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் துணை கேள்விகளுக்கு இன்று பதில் அளித்த அவர் இதன்மூலம் ஆயிரத்து 324 ரயில் நிலையங்கள் பயனடையும் என்றார்.

ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசுடன் ஒப்பிடுகையில் ரயில்வே துறைக்கு 9 மடங்கு கூடுதலாக நிதியை தேசிய ஜனநாயக கூட்டணி அரசு ஒதுக்கியிருப்பதாகவும், எடுத்துரைத்தார்.

மேம்பாலங்கள், ரயில்வே இணைப்பு சாலைகள் உள்ளிட்ட பல்வேறு கட்டமைப்பு நடவடிக்கைகள் கடந்த 10 ஆண்டுகளில் உயர் முன்னுரிமை அடிப்படையில் முனைப்புடன் மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாட்டில் உள்ள முக்கிய நகரங்களில் அடுத்த 50 ஆண்டு போக்குவரத்து மேலாண்மைக்கான புதிய திட்டங்கள் ஆராயப்பட்டு வருவதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

செயற்கை நுண்ணறிவு தொடர்பான கேள்விக்கு பதில் அளித்த அவர், மக்களவையில் ஒருமித்த கருத்து எட்டப்பட்டால் உரிய சட்டம் கொண்டுவர அரசு தயாராக உள்ளது என்றும் குறிப்பிட்டார்.

செயற்கை நுண்ணறிவு பிரிவில் எட்டரை லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் இணைந்திருப்பதாக திரு.அஷ்விணி வைஷ்ணவ் எடுத்துரைத்தார்.

************

**நிர்மலா சீதாராமன்**

சர்வதேச அளவில் பொருளாதார தேக்கநிலையை மீட்டெடுக்க அரசும், தொழிற்சாலைகளும் இணைந்து செயலாற்ற வேண்டியதன் அவசியத்தை மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் இந்திய தொழில் கூட்டமைப்பு நிகழ்ச்சியில் இன்று உரையாற்றிய அவர் உலக நாடுகளில் இயல்பான பொருளாதார நிலை திரும்ப சர்வதேச நாடுகள் முன்னுரிமையுடன் செயல்படுவதாக குறிப்பிட்டார்.

போர் சூழல்களும், தடைகள் தவிர்க்கப்பட்டால் மட்டுமே விநியோக சங்கிலியில் காணப்படும் இடர்பாடுகள் நீங்கும் என்று என்றார்.

உலக அளவில் மிகப்பெரிய சவாலாக பணவீக்கம் திகழ்வதாக கவலை தெரிவித்த அமைச்சர், அரசு இயந்திரம், தொழிற்சாலைகள், கொள்கை வடிவமைப்பாளர்கள், குடிமக்கள் உள்ளிட்ட அனைவரும் ஒருங்கிணைந்து செயல்படுவதன் மூலம் பொருளாதார மீட்சி ஏற்படும் என்றார்.

************

**மாநிலங்களவை**

உறுப்பினர்களிடையே வாக்குவாதம் காரணமாக மாநிலங்களவை நாள் முழுமைக்கும், எதிர்கட்சிகளின் அமளி காரணமாக மக்களவை பிற்பகல் 2 மணிவரையிலும் இன்று ஒத்திவைக்கப்பட்டன.

மாநிலங்களவை இன்றுகாலை கூடியதும் எதிர்கட்சி உறுப்பினர்கள் கொண்டுவந்த ஒத்திவைப்பு தீர்மானங்களை அவைத்தலைவர் திரு.ஜக்தீப்தன்கர் நிராகரித்தார்.

அவைத்தலைவர் மீது எதிர்கட்சிகள் கொண்டுவந்த நம்பிக்கை இல்லா தீர்மானத்திற்கு கண்டனம் தெரிவித்த நாடாளுமன்ற

விவகாரத்துறை அமைச்சர் திரு.கிரண் ரிஜிஜு இந்நடவடிக்கைக்கு காங்கிரஸ் மன்னிப்பு கோர வேண்டும் என்றார்.

அவைத்தலைவரின் மாண்பை குறைக்கும் எவ்வித முயற்சியையும் மத்திய அரசு முறியடிக்கும் என்றும் அவர் கூறினார்.

அவைத்தலைவர் திரு.ஜக்தீப்தன்கர் அரசியல் சாசனத்தின் மதிப்பீடுகளையும், கொள்கைகளையும் எப்பொழுதுமே பின்பற்றி வருவதாகவும், அவரது தலைமைக்கு உரிய மதிப்பளிக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

தொடர்ந்து பேசிய திரு.ரிஜிஜு காங்கிரஸ் தலைவர்களுக்கும், அமெரிக்காவை சேர்ந்த அறக்கட்டளை நிறுவனத்திற்கும் இடையே நிலவுவதாக கூறப்படும் தொடர்பு குறித்த பிரச்சனையை மீண்டும் எழுப்பி காங்கிரஸ் நாட்டின் நலனிற்கு எதிராக செயல்படுவதாக குறை கூறினார்.

திரு.ரிஜிஜுவின் குற்றச்சாட்டுகளை நிராகரித்த காங்கிரஸ் கட்சியின் திரு.பிரமோத் திவாரி அரசியல் சாசனத்தில் தமது கட்சி நம்பிக்கை கொண்டிருப்பதாகவும், அரசியல் சாசனத்தை மாற்றியமைக்க தேசிய ஜனநாயக கூட்டணி அரசு முயன்று வருவதாகவும் குற்றம் சாட்டினார்.

இந்த வாக்குவாதங்களால் நிலவிய அமளி காரணமாக மாநிலங்களவை முதலில் நண்பகல் வரை ஒத்திவைக்கப்பட்டது.

மீண்டும் அவை கூடியதும் அமெரிக்க நிறுவனம் தொடர்பான பிரச்சனை குறித்து விவாதம் நடத்தப்பட வேண்டும் என்று மத்திய அமைச்சர் திரு.ஜே.பி.நட்டா கோரிக்கை விடுத்ததோடு நாட்டின் இறையாண்மைக்கு இது மிகப்பெரிய அச்சுறுத்தல் என்று குறிப்பிட்டார்.

காங்கிரஸ் மீது தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து அக்கட்சியினர் முழக்கமிட்டதை அடுத்து நிலவிய அமளி காரணமாக மாநிலங்களவை நாள் முழுமைக்கும் ஒத்திவைக்கப்பட்டது.

மக்களவையில் இன்று கேள்வி நேரம் சுமூகமாக நடைபெற்றது.

இதனை தொடர்ந்து பூஜ்ஜிய நேரத்தில் மணிப்பூர் மாநில சட்ட ஒழுங்கு நிலைமை குறித்து காங்கிரஸ் உறுப்பினர் கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதில் அளித்த மத்திய அமைச்சர் திரு.பியூஷ்கோயல் மணிப்பூர் பிரச்சனை முன்னுரிமை அடிப்படையில் கையாளப்பட்டு வருவதாக குறிப்பிட்டார்.

தொடர்ந்து காங்கிரஸ் மற்றும் வெளிநாட்டு நிறுவனம் தொடர்பான குற்றச்சாட்டுகளை அமைச்சர் முன்வைத்தபோது அதற்கு எதிர்ப்பு தெரிவித்த எதிர்கட்சி உறுப்பினர்கள் அமளியில் ஈடுபட்டதால் மக்களவை பிற்பகல் 2 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.

************

**பிரதமர் - மகாகவி**

மகாகவி சுப்பிரமணிய பாரதியார் தொலைநோக்கு பார்வை கொண்ட சீர்மிகு எழுத்தாளர், சிந்தனையாளர், சுதந்திர போராட்ட வீரர் என்று பிரதமர் திரு.நரேந்திரமோடி புகழாரம் சூட்டியுள்ளார்.

மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் 143ஆவது பிறந்த தினம் இன்று கொண்டாடப்படுவதை ஒட்டி தமது சமூகவலைதள பதிவில் இதனை குறிப்பிட்டுள்ள பிரதமர், தமது எழுத்து திறனால் மக்களிடையே தேசபற்றை விதைத்ததாக அவர் எடுத்துரைத்தார்.

மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பக்கங்கள் அடங்கிய புத்தக தொகுப்பினை புதுதில்லியில் பிரதமர் இன்று வெளியிடுகிறார்.

இந்நாளை ஒட்டி முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் விடுத்துள்ள செய்தியில் பெண் விடுதலை, தாய் திருநாட்டின் சுதந்திரத்திற்கு தொண்டாற்றிய பாரதியாரை இந்நாளில் தலை வணங்குவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

பாரதியாரின் பிறந்த நாளை ஒட்டி அவர் பிறந்த ஊரான தூத்துக்குடி மாவட்டம் எட்டயபுரத்தில் அன்னாரது இல்லம் மற்றும் மணிமண்டபத்தில் உள்ள அவரது திருவுரு சிலைக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.இளம் பகவத் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

நெல்லையில் பாரதியார் பயின்ற பள்ளியின் வகுப்பறையில் மாணவ மாணவிகள் அவரது சிலைக்கு மலர் தூவி மரியாதை செலுத்தியதோடு பாரதியார் பாடல்களை பாடி கவி அஞ்சலி செலுத்தி தேசிய ஒருமைப்பாட்டு உறுதி மொழி ஏற்றனர்.

************

**கோவி. செழியன்**

முதலமைச்சர் ஆராய்ச்சி ஊக்கத்தொகை திட்டம் மற்றும் பாரதி இளங்கவிஞர் விருது திட்டத்தின் கீழ் கல்லூரி மாணாக்கருக்கு ஊக்கத்தொகைக்கான ஆணைகளை மாநில உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் இன்று வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர் தமிழக மாணாக்கரின் ஆராய்ச்சி திறமையை மேம்படுத்தி புதிய கண்டுபிடிப்புகளை ஊக்குவிப்பதே ஆராய்ச்சி ஊக்கத்தொகை திட்டத்தின் நோக்கம் என்றார்.

சுதந்திரபோராட்ட தியாகிகளை போற்றும் வகையில் பாரதி இளம் கவிஞர் விருது வழங்கப்படுவதாக அமைச்சர் எடுத்துரைத்தார்.

************

**திருவண்ணாமலை**

திருவண்ணாமலை மகாதீபத்தை ஒட்டி பக்தர்களுக்கு மலையேர அனுமதி இல்லை என மாநில இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

அதிக அளவிலான பக்தர்கள் மலைமீது ஏறக்கூடாது என நிபுணர்கள் குழு அறிவித்துள்ளதாக அவர் கூறியுள்ளார்.

காலையில் ஏற்றப்படும் பரணி தீபத்திற்கு ஆறாயிரத்து 600 பேருக்கும், மாலையில் ஏற்றப்படும் மகாதீபத்திற்கு 11 ஆயிரத்து 600 பேருக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

************

**இருவரி**

**தமிழக அரசின் கைவினை திட்டத்தின் கீழ் பயன்பெற** விரும்புவோர் அளஅந.வெ.பழஎ.வை என்ற இணையதளம் மூலம் இன்றுமுதல் விண்ணப்பிக்கலாம்.

கைவினை கலைஞர்களை தொழில்முனைவோராக உயர்த்தும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

**பெரம்பலூர் மாவட்டத்தில் வேளாண் துறை மூலம் மின்மோட்டார்** பம்பு செட்டுகளை தொலைவில் இருந்து செல்∴போன் மூலம் இயக்கும்

கருவிகளை மானியவிலையில் பெற விண்ணப்பிக்கலாம் என ஆட்சித்தலைவர் திருமதி கிரேஸ்பச்சாவ் தெரிவித்துள்ளார்.

சென்னையில் உள்ள 19 மண்டலங்களில் வரும் சனிக்கிழமை பொது விநியோக குறைதீர் நாள் கூட்டம் நடைபெற இருப்பதாக தமிழக அரசின் செய்திகுறிப்பு தெரிவிக்கிறது.

************

**தண்ணீர் திறப்பு**

ஈரோடு பவானிசாகர் அணையிலிருந்து அரக்கண் கோட்டை தடப்பள்ளி வாய்க்கால்களில் உள்ள பாசன நிலங்களுக்கு இன்று தண்ணீர் திறக்கப்பட்டது.

இதன்மூலம் கோபிசெட்டிபாளையம், அந்தூர், பவானி வட்டங்களில் உள்ள 24 ஆயிரத்து 504 ஏக்கர் நிலங்கள் பாசன வசதிபெறும்.

************

**நாகூர்**

நாகை மாவட்டம் நாகூர் ஆண்டவர் தர்காவின் 468ஆவது கந்தூரி விழாவை ஒட்டி நாளை மாவட்டத்திற்கு உள்ளூர் விடுமுறை அளிக்கப்பட்டுள்ளதாக ஆட்சித்தலைவர் திரு.ஆகாஷ் தெரிவித்துள்ளார்.

முக்கிய நிகழ்வான சந்தனகூடு ஊர்வலம் இன்றிரவு புறப்பட்டு நாளை காலை நாகூர் தர்கா வந்தடைந்ததும் சந்தனம் பூசும் வைபவம் நடைபெறும்.

************

**வானிலை:**

தென்கிழக்கு வங்ககடலில் நிலைகொண்டுள்ள ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதி அடுத்த 24 மணி நேரத்தில் தமிழகம் இலங்கை கடற்கரை பகுதிகளை நோக்கி நகரக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதன்காரணமாக கடலூர், புதுக்கோட்டை டெல்டா மாவட்டங்களில் கன முதல் மிக கனமழை பெய்யக்கூடும் என்றும் இம்மையத்தின் இயக்குநர் திரு.செந்தாமரைகண்ணன் கூறியுள்ளார்.

…..வாய்ஸ்….

நாகை மாவட்டத்தில் மீனவர்கள் கடலுக்குள் செல்வதற்கான டோக்கன்கள் இன்று வழங்கப்படவில்லை.

************

**மகளிர் கிரிக்கெட்**

பெர்த்தில் நடைபெறும் 3ஆவது இறுதி மகளிர் ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் இந்தியா வெற்றி பெற 299 ரன் இலக்கை ஆஸ்திரேலியா நிர்ணயித்துள்ளது.

முன்னதாக ஆஸ்திரேலியா 50 ஓவரில் 6 விக்கெட் இழப்பிற்கு 298 ரன் எடுத்தது.

3 போட்டிகள் கொண்ட இத்தொடரை 2-0 என்ற கணக்கில் ஆஸ்திரேலியா ஏற்கனவே கைப்பற்றியுள்ளது.

************

**செஸ்**

சிங்கப்பூரில் நடைபெறும் உலக செஸ் சேம்பியன்சிப் போட்டியின் 13 ஆவது சுற்றில் இன்று இந்திய வீரர் குகேஷ் நடப்பு சேம்பியனான சீனாவின் டிங் லிரனை எதிர்கொள்கிறார்.

************

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது**

************